Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**

Case No. **CC.NO. 52/2015**

**DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.8 Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திருமதி. சரோஜினி | **தொழில்** | காவல் ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. அனுமந்தன் | **கிராமம்/ஊர்** | சென்னை |
| **வயது** | 40 | **மாவட்டம்** | சென்னை |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 27th day of May 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

நான் தற்போது சென்னை மத்திய குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2012 ம் வருடம் நான் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றிய திரு. சந்திரபாபு அவர்கள் இறந்து விட்டதால் அவருக்காகவும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சந்திரபாபு அவர்கள், அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, நிலைய குற்ற எண். 672/2012 இதச பிரிவுகள் 457,380 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர், கடந்த 05.10.2012 அன்று மாலை 16.30 மணிக்கு, சம்பவயிடம் சென்று சாட்சிகள் தங்கவேல் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த மாதிரி வரைபடம் என்னால் அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர், வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான், எதிரி நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண். 809/2012 என்ற வழக்கில் கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில், எதிரி இவ்வழக்கிலும் ஈடுபட்டது தெரியவந்தது. எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதை ஒப்பு கொண்டு வழக்கு சொத்தான தங்க நகைகளை எதிரியின் பாட்டி வீட்டிடம் மறைத்து வைத்திருப்பதாக கூறியதன் பேரில் சாட்சிகள் பெரியசாமி மற்றும் பார்த்திபன் முன்னிலையில் எதிரி காண்பித்த இடத்திற்கு சென்று எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 20 கிராம் ( 2 ½) சவரன் எடை கொண்ட தங்க நெக்கலீஷ் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். (அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது ) பின்னர் எதிரியை கைது செய்து நிலையம் சேர்ந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தினை படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் –91 அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், எனது விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 457,380 கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரியை நாட்றம்பள்ளி பஸ் நிலையத்தில் வைத்து நான் 03.00 அளவில் கைது செய்தபோது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 50 நபர் இருந்திருப்பார்கள். எதிரரயின் மீது இதற்கு முன்பு வழக்கு நிலுவையில் இருந்ததா என்றால் இருந்தது. எதிரியை யார் அடையாளம் காட்டினார் என்றால் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் எதிரியை கைது செய்தேன். எதிரியை நான் காவல் நிலைய காவலுக்கு உட்படுத்தினேனா என்றால் இல்லை. மற்றொரு வழக்கிற்கும் நான் தான் புலன் விசாரணை அதிகாரி என்பதால் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் இவ்வழக்கில் எதிரியை கைது செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்திற்கு அந்த இடத்தில் உள்ள நபர்களை ஏன் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் யாரும் முன்வரவில்லை. எனவே அவர்களின் மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு கூற இயலாது. விஏஓ மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்களை நான் தான் சாட்சியாக இருக்கும் படி அழைத்தேன் என்றால் சரிதான். எதிரியின் மீது போடப்பட்டுள்ள 3 வழக்குகளும் பொய் வழக்குகள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை கைப்பற்றிய இடத்தில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் குறிப்பிட்டு கூற இயலாது. அந்த இடத்தை சேர்ந்தவர்களை இந்த வழக்கு சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் இல்லை. வழக்கு சொத்தை கட்டி வைத்ததாக சொல்லப்படும் துணியை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். புகாரில் 3 சவரன் என்றாலும், கைப்பற்றப்பட்டது 2 1/2 சவரன் என்றால் சரிதான். வழக்கு சொத்து இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பூட்டு

உடைத்து திருடப்பட்டது என்று கூறப்பட்டுள்ளதால் அந்த பூட்டை கைப்பற்றினேனா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் இருந்து எடுக்கப்பட்ட கைரேகைகளில் எதிரியின் கைரேகை பொருந்தவில்லை என்றால் சரிதான். எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், இவ்வழக்கில் நான் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, இவ்வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே வைத்து, தயாரித்து, எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness          Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |